தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2016**

**D011** பண்டைய இலக்கியம்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. அம்மூவனார் எத்திணைப் பாடுவதில் சிறந்தவர்?
2. பாலை பாடிய பெருங்கடுங்கோ எந்த அரச மரபைச் சேர்ந்தவர்?
3. வரைவு கடாதல் என்றால் என்ன?
4. வாயில்கள் என்போர் யாவர்?
5. களவன் என்பது எதைக் குறிக்கும்?
6. அகநானூறு நூலைத் தொகுத்தவர் யார்?
7. பைங்கறி என்பது எதைக் குறிக்கும்?
8. முட்டாது கொடுப்போன் யார்?
9. நல்லியக்கோடனின் தலைநகரம் எது?
10. அறிவு மடம்படுதல் என்றால் என்ன?
11. முரசு எத்தனை வகைப்படும் ? அவையாவை?
12. உவமை எவற்றை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும்?
13. கையறு நிலை என்பது யாது?
14. காட்சி வாழ்த்து என்றால் என்ன?
15. போர் செய்வதற்காக வீரர்கள் தங்கியிருந்த இடத்தை எவ்வாறு குறித்தனர்?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. விளையாடு ஆயமொடு எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலின் பொருளை எழுதுக
2. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?
3. ஆடிப்பாவையைப் பரத்தை யாருக்கு உவமையாக்குகிறாள்?
4. சிறுவெண்காக்கை உணர்த்தும் உள்ளுறை யாது?
5. அகநானூற்றின் முப்பகுப்பினைக் கூறுக.
6. கடையெழு வள்ளல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
7. நல்லியக்கோடனின் அரண்மனை வருணனையைக் குறிப்பிடுக.
8. பொதுவியல் திணை என்பதை விளக்குக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) நற்றிணைப் பாடல்களின் அகப்புற வடிவங்களைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) குறுந்தொகைப் பாடல்களில் புலவர்கள் பயன்படுத்தியுள்ள வெளிப்பாட்டு முறைகளை விளக்குக.

2. (அ) ஐங்குறுநூறு பாடல்களின் வழி ஐந்திணைக்குரிய முப்பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ள பாணரின் வறுமை மற்றும் செல்வ நிலையை விவரிக்க.

3. (அ) வாழ்வின் பேருண்மைகளைப் புறநானூற்றுப் பாடல் வழி விளக்கிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சங்க காலப் போர்முறையைப் பதிற்றுப்பத்துப் பாடல்களின் வழி விளக்குக.

***